# 29

## கலீபா அலி (ரழி)

கைபர் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அலி (ரழி) அவர்கள் மிகவும் வேகமாக போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அவ்வேளை அவரது கேடயம் கீழே விழுந்து விட்டது. கைபர் கோட்டையின் கதவைப் பெயர்த்துத் தனது கேடயமாக பாவித்தார்கள். தொடர்ந்து வெற்றி கிடைக்கும் வரை போராட்டத்தில் ஈடுபட்டார்கள். யுத்தம் முடிந்த பின்னர், அவர் கேடயமாக பயன்படுத்திய கோட்டைக் கதவை தூக்குவதற்கு எட்டுப் பேர் தேவைப்பட்டார்கள்.

முஹம்மத் r அவர்கள் ''சுவர்க்கவாசிகள்'' என்று நன்மாராயம் செய்த ஸஹாபாக்களுள் அலி (ரழி) அவர்களும் ஒருவர். இவர் முன்னோர் வழியில் சென்று நல்லாட்சி புரிந்த நான்காவது கலீபா ஆவார். இவர் ஹாஷிம் குலத்தில் அபூதாலிப் -பாத்திமா தம்பதியினருக்கு ஹிஜ்ரத்துக்கு 23 ஆண்டுகளுக்கு முன் மகனாகப் பிறந்தார்கள்.

சிறுவயது முதல் நபி (ஸல்) அவர்களுடன் வாழ்ந்தமையால் ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட தீய பழக்க வழக்கங்களிலிருந்து விலகி இருந்தார்கள். சிறுவயதிலேயே எழுத, வாசிக்கக் கற்றுக் கொண்டார்கள்.

நபி r அவர்களுக்கு முதல் வஹி கிடைக்கப் பெற்ற மறுதினமே பத்தாவது வயதில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். சிறுவர்களில் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றவர் இவரே. நபி r அவர்கள் இஸ்லாமியப் பிரசாரப் பணியை ஆரம்பித்தபோது முதலில் தனது குடும்பத்தினரை அழைத்தார்கள். அவ்வேளை தனது பிரசாரப் பணிக்கு உதவி செய்வோர் யாரென வினவியபோது எல்லோரும் அமைதியாக இருக்க சிறுவர் அலி (ரழி) மட்டும் இதோ நான் இருக்கிறேன் என முன்வந்தார். அபுல் ஹஸன், ஹைதர், அபூ துராப் ஸைபுல்லாஹ் என்ற சிறப்புப் பெயர்களும் இவருக்கு உண்டு.

தியாகம், வீரம், அறிவு, நீதி போன்ற பண்புகள் இவரிடம் காணப்பட்டன. நபி r அவர்கள் ஹிஜ்ரத் செல்ல ஆயத்தமானபோது தன்னிடமிருந்த அமானிதப் பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பை அலி (ரழி) அவர்களுக்கே வழங்கினார்கள். குறைஷி வீரர்கள் நபியவர்களைக் கொலை செய்ய வீட்டைச் சுற்றி வளைத்த வேளையில் சிறிதேனும் அஞ்சாது நபிகளாரின் படுக்கையில் உறங்கினார்கள். அன்று தன் உயிரையே நபி r அவர்களுக்காக தியாகம் செய்ய முன்வந்தார்கள்.

அலி (ரழி) அவர்கள் நபி r அவர்களின் இளைய மகளான பாத்திமா (ரழி) அவர்களை தனது 23ஆம் வயதில் விவாகம் செய்தார்கள். இவரது திருமணம் எளிமையான முறையில் நடைபெற்றது. இவர்களுக்கு 3 ஆண் குழந்தைகளும், 2 பெண் குழந்தைகளும் பிறந்தனர்.

ஒரு ஆண் குழந்தை சிறுவயதிலேயே மரணித்து விட்டது. ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி) இருவரும் மற்றைய புதல்வர்களாவர்.

இவர்கள் எளிமையாகவே தனது குடும்ப வாழ்வை நடத்தி வந்தார்கள். அவர்களது இல்லம் ஒரு குடிசையாகவே இருந்தது. சில சந்தர்ப்பங்களில் உண்ண வழியின்றி பசியோடு இருப்பார்கள். நபி r அவர்கள் தமக்குக் கிடைக்கும் அன்பளிப்புக்களில் மகளுக்கு அனுப்பி வைப்பவைகளை ஏற்றுக் கொள்வார்கள். நபி r அவர்கள் வபாத்தாகி ஆறு மாத காலத்துள் பாத்திமா (ரழி) மரணித்து விட்டார்கள்.

நபி r காலத்தில் இடம்பெற்ற பல யுத்தங்களில் பங்கு பற்றினார்கள். போர் முனையில் எந்தவொரு எதிரியும் இவரைத் தனியே எதிர்கொள்வதற்கு முன் வருவதில்லை. போராட்டத்தில் பிரபலமான வீரர்கள் பலரை வீழ்த்தியுள்ளார்கள்.

நபி r அவர்களின் மரணத்திற்குப் பின்னர் கலீபாக்களின் ஆலோசகராகப் பணியாற்றினார்கள். கல்விப் பணியிலும் ஈடுபட்டார்கள். அலி (ரழி) அவர்கள் பேச்சாற்றல் மிக்கவர்கள். இவரது அறிவுரைகள் 'நஹ்ஜுல் பலாஹா' எனும் பெயரில் பிற்காலத்தில் தொகுக்கப்பட்டன.

நீதித் துறையிலும் இவர்கள் சிறந்து விளங்கினார்கள். ஒருமுறை அலி (ரழி) அவர்கள் யமன் பிரதேச நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது, அல்லாஹ்வின் தூதரே! நான் ஒரு இளைஞன். தீர்ப்பு என்றால் என்னவென்பதை நான்அறிய மாட்டேன். அப்படியிருந்தபோதும் தீர்ப்பு வழங்குவதற்காக என்னை நீங்கள் அனுப்புகிறீர்களா? என நபி r அவர்களிடம் வினவினார்கள். நபி r அவர்கள் தனது கையை அலி (ரழி) அவர்களின் நெஞ்சில் வைத்து 'யா அல்லாஹ்! இவருடைய உள்ளத்தை நேர்வழியில் செலுத்துவாயாக. இவரது நாவை உறுதிப்படுத்துவாயாக' என்று பிரார்த்தனை செய்தார்கள்.

இவர்கள் அதிக இறையச்சம் கொண்டவராக இருந்தார்கள். இரவு நேரங்களில் பெரும் பகுதியை தொழுகையிலும், அல்குர்ஆனை ஓதுவதிலும் கழித்தார்கள். உலக இன்பங்களை வெறுத்தார்கள். தர்மம் செய்வதில் விருப்பங்கொண்டார்கள்.

## கலீபாவாகத் தெரிவு செய்யப்படல்

உஸ்மான் (ரழி) அவர்களின் கொலையைத் தொடர்ந்து அலி (ரழி) அவர்கள் கலீபாவாக தெரிவு செய்யப்பட்டார்கள். ஹிஜ்ரி 35இல் இஸ்லாத்தின் நான்காவது கலீபாவாக பதிவியேற்றார்கள்.

இவர்கள் கலீபாப் பதவி ஏற்கும்போதே நாட்டில் அமைதியற்ற நிலை காணப்பட்டது. உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் கிளர்ச்சி செய்தவர்கள் தொடர்ந்தும் கலவரங்களில் ஈடுபட்டனர். அதேவேளை டமஸ்கஸில் கவர்னராக இருந்த முஆவியா இப்னு அபூ ஸுப்யான் (ரழி) கலீபா பதவியை ஏற்பதற்கு தயாரானார். இதன் காரணமாக அலி (ரழி) அவர்கள் பல யுத்தங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

ஹிஜ்ரி 36இல் - ஜமல் யுத்தமும்,

ஹிஜ்ரி 36இல் - ஜமல் யுத்தமும்,

ஹிஜ்ரி 37இல் - ஸிப்பீன் யுத்தமும்,

ஹிஜ்ரி 38இல் - கவாரிஜ்களுக்கு எதிரான நஹ்ர்வான் யுத்தமும் நிகழ்ந்தன.

இவரது அரசியல் தலைநகரமாக கூபா அமைந்தது. இவரது ஆட்சிக் காலத்தில் கலவரங்கள் காணப்பட்டபோதும் நேர்மையான ஆட்சியை நடாத்தினார்கள்.

நாட்டில் தொடர்ந்து காணப்பட்ட கிளர்ச்சியின் விளைவாக அலி (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 40ஆம் வருடம் தனது 63ஆவது வயதில் சுபஹுத் தொழுகைக்காகப் பள்ளியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அப்துர் ரஹ்மான் இப்னு முல்ஜிம் என்ற காரிஜிய்யினால் கொலை செய்யப்பட்டார்கள்.

**பயிற்சி:**

1. அடைப்புக்குள் உள்ள சரியான விடையை தெரிவு செய்து கோடிடுங்கள்

   i) சிறு வயதில் முதன் முதல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்
   [உஸ்மான் (ரழி), உமர் (ரழி), அலி (ரழி), அபூபக்ர் (ரழி)] ஆவார்.

   ii) அலி (ரழி) அவர்களின் மனைவியின் பெயர்
   [ஆயிஷா (ரழி), பாத்திமா (ரழி), ஆத்திகா (ரழி), உம்முகுல்ஸூம் (ரழி)] ஆகும்.

   iii) அலி (ரழி) அவர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் சிறப்புப் பெயர்
   [அபுல் ஹஸன், அபூதாலிப், ஸைபுல்லாஹ், அபூ துராப்] ஆகும்.

   iv) கலீபா அலி (ரழி) அவர்களின் அரசியல் தலைநகரமாக அமைந்தது
   [மக்கா, மதீனா, கூபா, ஜெரூஸலம்] ஆகும்.

2. அலி (ரழி) அவர்களிடம் காணப்பட்ட சிறப்பம்சங்களை கண்டறிந்து ஒரு பந்தியாக எழுதுங்கள்

3. அலி (ரழி) அவர்கள் இஸ்லாத்துக்குச் செய்த சேவைகள் ஐந்தினைப் பட்டியல்படுத்துங்கள்.